**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## OS. No.82/2021

**26.09.2025**

**P.W.2-ராஜம்மாள்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 9வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது அப்பா பெயர் மூக்கன் (எ) அம்மாவாசி (எ) பெருமாள்தேவர் ஆகும். எனது அம்மா பெயர் கருத்தம்மாள் (எ) ஒச்சம்மாள் (எ) ஒச்சாயி ஆகும். என்னுடன் பிறந்தவர் என்னையும் சேர்த்து 3 பேர்கள் ஆவோம். எனது கணவர் பெயர் மாயாண்டி என்றால் சரிதான். எனது மாமனார் பெயர் அய்யாவு (எ) அழகுமலை. எனக்கு 5 பிள்ளைகள். 5 பிள்ளைகளுக்கும் திருமணம் நடந்துவிட்டது என்றால் சரிதான். மூத்தபிள்ளையின் பெயர் மலர்கொடி ஆகும். மலர்கொடி மகளுக்கு திருமணம் நடந்துவிட்டது என்றால் சரிதான். எனது கணவரின் சொந்த ஊர் நல்லஒச்சான்பட்டி என்றால் சரிதான். அங்கு எனது கணவருக்கு விவசாய நிலங்கள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி நிலங்களை நானும், எனது கணவரும் விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தம்பி பெயர் துரைப்பாண்டி. அவருக்கு 5 பிள்ளைகள். மேற்படி 5 பிள்ளைகளுக்கும் திருமணம் முடிந்துவிட்டது என்றால் சரிதான். எனது தங்கை பெயர் பழனியம்மாள். அவர் மதுரை, கரிமேட்டில் உள்ளார் என்றால் சரிதான். நானும், எனது தங்கையும் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனது கணவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழகிற்காக கையெழுத்து செய்யவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3வது இலக்க சொத்து வீடு ஆகும். மேற்படி வீட்டை கிரையம் கொடுத்த விசயம் தெரியுமா என்றால் தற்போது தான் தெரியும். எனக்கு ஏற்கனவே கிரையம் கொடுத்தது தெரியும் என்றால் சரியல்ல. குபேந்திரன் கிரையம் பெற்றது தற்போது தான் தெரியும். அவர் மேற்படி இடத்தில் வீடு கட்டி 15 வருடங்களுக்கு மேல் குடியிருந்து வருகிறார் என்றால்

சரியல்ல. எனக்கு ஏற்கனவே தெரிந்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குபேந்திரன் கிரையம் வாங்கியதை மோசடி செய்ய வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.26 16:51:12 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.